| O.S.No. 200/2020 | PW1: திரு. தட்சிணாமூர்த்தி<br>த/பெ. திரு. முருகன் | 24-03-2026 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**முதல் விசாரணை தொடர்ச்சி :**

எனது தரப்பில் கீழ்க்கண்ட ஆவணத்தை தாக்கல் செய்து குறியீடு செய்கிறேன்.

| வ.எண். | தேதி | ஆவணங்கள் |
|---|---|---|
| 1. | 20-06-2002 | கிரைய பத்திரத்தின் இணைய வழி நகல் – வா.சா.ஆ.5. |
| 2. | 14-08-1985 | பதிவுறா சம்மத பத்திரம் – அசல் – வா.சா.ஆ.6. (பதிவுறா ஆவணம் என்பதால் 1-ம் பிரதிவாதி தரப்பு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது.) |

எனவே, தாவாப்படி தீர்ப்பாக வேண்டி பிராத்திக்கிறேன்.

**1-ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :**

1. நான் பிரமாண வாக்குமூலத்தில் உள்ள முகவரியில் வசிக்கிறேன் என்பதற்கு ஆதரமாக ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் சென்னை கோட்டூர்புரத்தில் வசிக்கின்றேன். எனது தாத்தா பெயர் அப்பாதுரை. அவர் எனது தந்தையின் தந்தை ஆவார். அப்பாதுரைக்கு இரண்டு மகன்கள், மூன்று மகள்கள் ஆவார்கள், அவர்கள் பெயர் முருகன், வள்ளியம்மாள், எல்லம்மாள், நாகம்மாள், படவேட்டான். அதில் முருகன் எனது தந்தை. வள்ளியம்மாள், எல்லம்மாள், நாகம்மாள் ஆகியோருக்கு திருமணமாகிவிட்டது. வள்ளியம்மாள் சென்னையிலும், எல்லம்மாள் வந்தவாசியில் உள்ள மேலப்பூண்டியிலும், நாகம்மாள் செய்யாறு நாவல் கிராமத்திலும் வசிக்கிறார்கள். மேற்படி அனைவருடனும் நான் பேசுவேன்.

2. ஆரியமாலாவுக்கும் படவேட்டானும் நடந்த திருமணத்தின் பந்தமாக அவர்களுக்கு குழந்தைகள் ஏதும் இல்லை. ஆரியமாலாவின் வாரிசு படவேட்டான் ஆவார். அந்த வாரிசு சான்றிதழ் – இணைய வழி நகல் – **பி.சா.ஆ.1**. ஆரியமாலா இறந்தபிறகு படவேட்டானை யார் பராமரித்து வந்தது என்றால் நானும், எனது வீட்டினரும் பராமரித்து வந்தோம். 2, 3 பிரதிவாதிகளை ஏன் வாதிகளாக சேர்த்து வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் அவர்கள் ஒத்துவரவில்லை, அதனால் பிரதிவாதிகளாக சேர்த்தோம். வா.சா.ஆ.6 ஆவணம் எந்த தேதியில் எழுதப்பட்டது என்றால் சரியாக ஞாபகமில்லை. வா.சா.ஆ.6 ஆவணம் ஒரு பதிவு செய்யப்படாத ஆவணம் என்றாலும், அந்த ஆவணம் நடைமுறைக்கு வரவில்லை என்றாலும் சரியல்ல.

3. படவேட்டான் 27.04.2020 தேதியன்று இறந்தார். படவேட்டான் இறப்பதற்கு முன்பாக வா.சா.ஆ.2 பட்டாவில் தாவா 'A' ஷெட்யூல் சொத்து படவேட்டான் பெயரில் உள்ளது என்றால் சரிதான். எனது தாத்தாவின் பூர்வீகம் செய்யாறு தாலுக்கா புதுக்கோட்டை கிராமம் ஆகும். என் தாத்தா புதுக்கோட்டை கிராமத்தில் உள்ள பூர்வீக சொத்தினை விற்பனை செய்து அதில் வந்த வருமானத்தைக் கொண்டு தாவா 'A' ஷெட்யூல் சொத்தினை கிரையம் பெற்றார் என்றால் சரியல்ல. தாவா 'A' ஷெட்யூல் சொத்தில் எனக்கு பாக உரிமை இல்லை என்றாலும், அதனால்தான் அச்சொத்தானது கூட்டுப்பட்டாவாக இருந்து வருகிறது என்றாலும் சரியல்ல. படவேட்டானுக்கும் சுமதிக்கும் எனது அத்தை நாகம்மாள்தான் திருமண ஏற்பாடு செய்தார் என்றால் அது எனக்கு தெரியாது.

4. படவேட்டானுக்கும் சுமதிக்கும் ஊர் சாட்சியாக செய்யாரில் செய்யாறு ஜெ. ஜெயலலிதா அரக்கட்டளையில் திருமணம் நடைபெற்றது என்றாலும், அதற்கான அழைப்பிதழ் மற்றும் ரசீது உள்ளது என்றாலும் சரியல்ல, அவ்வாறு யார் வேண்டுமானாலும் அழைப்பிதழ், ரசீது அடிக்கலாம். அந்த திருமணத்திற்கு என்னுடைய தாயாரும் வந்திருந்தார் என்று சொன்னால் சரியல்ல. படவேட்டானுக்கும் சுமதிக்கும் நடந்த திருமணம் சட்டப்படி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றாலும், அதனை மறுக்க எங்களுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றாலும் சரியல்ல.

5. எனது தங்கை நிர்மலா காதல் திருமணம் செய்து கொண்டார். 3–ம் வாதி காதல் திருமணம் செய்து கொண்டார். 3–ம் வாதி அரசு ஓட்டுநராக உள்ளார். 3–ம் வாதிக்கு 1–ம் பிரதிவாதி முன்நின்று திருமணம் செய்து வைத்தார் என்று சொன்னால் சரியல்ல. படவேட்டான் அரசு போக்குவரத்துத்துறையில் வேலை செய்தார். படவேட்டான் அவரது மனைவி சுமதிக்கு அரசு போக்குவரத்துக்கழகத்தில் இலவச பயணச்சீட்டு வாங்கி வைத்திருந்தார் என்றால் அது பொய் ஆகும். படவேட்டான் ITI படித்துள்ளார். படவேட்டானுக்கு என் தந்தை வேலை வாங்கி தரவில்லை என்றாலும், அவர் படித்ததினாலேயே அவருக்கு வேலை கிடைத்தது என்றாலும் சரியல்ல. 'B' ஷெட்யூல் சொத்தினை பொது கடன் வாங்கிதான் என் தந்தை கிரையம் பெற்றார் என்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. தாவா 'B' ஷெட்யூல் சொத்திற்கான வில்லங்க சான்றிதழில் படவேட்டான் 20.06.2002–ல் ரிஸ்வான் என்பவரிடமிருந்து கிரையம் பெற்றதாக உள்ளது என்றால் சரிதான். அந்த வில்லங்க சான்றிதழ் – **பி.சா.ஆ.2**.

6. ஆரியமாலாவுக்கும் படவேட்டானுக்கும் எனக்கு 24 வயது இருக்கும்போது திருமணம் நடைபெற்றது. எனக்கு திருமணம் ஆனதற்கு 2 ஆண்டுக்கு முன்னர் படவேட்டானுக்கு திருமணம் நடந்தது. எனக்கு 06.12.1998-ல் திருமணம் ஆனது. எனக்கு தற்போது 53 வயதாகிறது. எனது பிரமாண வாக்குமூலத்தில் 45 வயது என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எனது சித்தப்பா படவேட்டான் 01.09.1998-ல் அரசு பணியில் சேர்ந்ததால் அதில் அவருக்கு வந்த வருமானத்தைக் கொண்டு 'B' ஷெட்யூல் சொத்து கிரையம் பெறப்பட்டது என்றால் சரியல்ல. தாவா 'B' ஷெட்யூல் சொத்தினை நானும் எனது தந்தையும் பணம் கொடுத்து படவேட்டானுக்கு கிரையம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எனது தந்தை 2002-ம் வருடம் மாதம் ரூ.12,000/- சம்பளம் வாங்கினார். அவர் அந்த சமயம் ரூ.1,500/-தான் சம்பளம் வாங்கினார் என்றாலும், வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

7. எனது பிரமாண வாக்குமூலத்தில் பாரா 9-ல் சொல்லியுள்ள சங்கதி முழுக்க முழுக்க பொய் என்றால் சரியல்ல. நான் சென்னையில் கடந்த 10 வருடமாக இருந்து வருகிறேன். நான் B.A., படித்துள்ளேன். நான் சென்னையில் PVC Door கம்பெனியில் வேலை செய்கிறேன். படவேட்டானுக்கு ஈமச்சடங்குகளை எங்கள் ஊரில் நான்தான் செய்தேன். படவேட்டானின் முதல் மனைவி இறந்ததற்கு பிறகு சட்டப்படி சுமதியை படவேட்டான் திருமணம் செய்துகொண்டார் என்றாலும், சுமதி படவேட்டானின் சட்டப்படியான மனைவி என்றாலும் சரியல்ல. சுமதியை நாங்கள் சொத்திற்கு ஆசைப்பட்டு அடித்தோம் என்றாலும், அது சம்மந்தமாக அவர் பெரணமல்லூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றாலும் சரியல்ல.

8. தாவா 'B' ஷெட்யூல் சொத்தினை படவேட்டானும், சுமதியும் சேர்ந்து வாங்கிய விஷயம் ஊரில் உள்ள நபர்களுக்கு தெரியும் என்றாலும், அவர்களை விசாரித்தால் உண்மை தெரியவரும் என்றாலும் சரியல்ல. படவேட்டானுக்கு சுமதிதான் சட்டப்படியா வாரிசு என்றால் சரியல்ல. தாவா 'A' ஷெட்யூல் சொத்தில் சுமதி பெயரும் கூட்டுப்பட்டாவில் சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த கணினி பட்டா – **பி.சா.ஆ.3**(வழக்கு இருக்கும்போது எவ்வகையில் சேர்க்கப்படும் என சாட்சி கூறுகிறார்).

9. 1–ம் பிரதிவாதி சுமதி அரியப்பாடி கிராமத்தில் இருக்கும்போது நானும், எனது சகோதரர்களும் சேர்ந்து தாவா 'B' ஷெட்யூல் சொத்தில் உள்ள பொருட்களை அடித்து உடைத்து சேதப்படுத்தியதால் சுமதி தூசி காவல் நிலையத்தில் புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் அது சம்மந்தமாக என்னை எதுவும் விசாரணை செய்யவில்லை. எனது அத்தை நாகம்மாளுக்கு 2 மகன்கள், அதில் ஒரு மகன் பெயர் ராஜசேகர். ராஜசேகர் தூசி காவல் நிலையத்தில் பணி செய்ததால் அவர் சொல்லி எங்களை விசாரிக்க செய்யவில்லை என்றால் சரியல்ல.

10. நான் இவ்வழக்கில் கோரியுள்ள பரிகாரம் சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றாலும், அதனால் என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னாலும் சரியல்ல. தாவா 'A' ஷெட்யூல் சொத்தில் சுமதிக்கு சரிசம பாகமும், தாவா 'B' ஷெட்யூல் சொத்தில் முழு உரிமையும் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் சுமதியிடம் சொத்துக்கள் குறித்து கட்டபஞ்சாயத்து செய்தோம் என்றால் அவ்வாறு இல்லை.

11. நாங்கள் தாக்கல் செய்துள்ள வழக்கினை 1-ம் பிரதிவாதியின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. நான் இத்தாவாவில் 1-ம் பிரதிவாதியை தவறாக சித்தரித்து தாக்கல் செய்துள்ளதால் 1-ம் பிரதிவாதி எங்களுக்கு எதிராக அவதூறு வழக்கு தாக்கல் செய்வதை ரிசர்வ் செய்து கொள்கிறார் என்று சொன்னால் சரியல்ல.

ஒம்/- தட்சிணாமூர்த்தி

சாட்சியின் கையொப்பம்

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.03.24 13:28:11 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**